


# நம்பகமான சுகாதாரத் தகவல்களை அடையாளம் கண்டறிதல்



நீங்கள் பயன்படுத்தும் மருத்துவ, சுகாதாரத் தகவல்கள் நம்பகமானவை என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது?

நீங்கள் வாசித்த சுகாதாரத் தகவல்கள் நம்பகமானவையா என்பதைக் கண்டறிய S.U.R.E. படிநிலைகளைப் பயன்படுத்தவும்.

## மூலம்



### தகவல் எங்கிருந்து தோன்றியது என்பதைப் பாருங்கள். அது நம்பகமானதா?

தகவல் நம்பகமானதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். தகவலை எழுதியவரின் விவரங்களைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். அவர் ஒரு தகுதிவாய்ந்த சுகாதார நிபுணரா, அல்லது ஏதேனும் ஒரு தொழில்முறைச் சங்கத்துடன் இணைந்தவரா?

- தகவலை எழுதிய நபர் உள்ளூர் சுகாதார நிபுணராக இருந்தால், அவர் சுகாதார அமைச்சின் வலைத்தளத்தின் சுகாதார வல்லுநர்கள் தேடலில் பட்டியலிடப்பட்டுள்ளாரா? (https://www.moh.gov.sg/hpp/all-healthcare-professials/healthcare-professionals-search
- தகவலை எழுதியவர், பிரபல மருத்துவ இதழ்களில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளாரா?

## புரிந்துகொள்ளுதல்

### நீங்கள் என்ன வாசிக்கிறீர்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, அதில் தெளிவுபெற முடிகிறதா என்று பாருங்கள்.

கருத்துக்களைக் காட்டிலும் உண்மைகளைக் கவனியுங்கள். தனிப்பட்ட சார்புகள்மீது கேள்வி எழுப்புங்கள். பின்வரும் கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளலாம்:



- எழுதியவர் இந்தத் தகவலை எழுதுவதற்கான நோக்கம் என்ன?
- சில மருத்துவத் தயாரிப்புகளை அல்லது மருந்தகத்தை அங்கீகரிக்கவோ அல்லது விளம்பரப்படுத்தவோ, தகவலை எழுதியவருக்குப் பணம் கொடுக்கப்படுகிறதா?

## மதிப்பீடு

### சமநிலையைக் கண்டறிந்து நியாயமான முடிவை எடுங்கள்.

உங்கள் ஆராய்ச்சியை மேற்கொண்டு, நம்பகமான சில ஆதாரங்களை ஒப்பிட்டுப்பாருங்கள்.

- நீங்கள் ஆராய்ந்த அதே தகவலை, எழுதியவர் வேறு விதமாக முன்வைத்துள்ளாரா?
- அவர் வழங்கும் தகவல் நடப்பில் உள்ளதாகவும் புதுப்பிக்கப்பட்டதாகவும் உள்ளதா?




## ஆராய்ச்சி

### ஆழ்ந்து ஆராய்ந்து, ஆரம்ப மூலத்துக்கு அப்பால் செல்லுங்கள்.

எழுதியவர் தருபவை உண்மையான தகவல்களா என்பதை அறிய, பலதரப்பட்ட நம்பகமான ஆதாரங்களோடு அவற்றை ஒப்பிடுங்கள். நீங்கள் பயன்படுத்தக்கூடிய சில தகவல் மூலங்கள் இங்கே:

- சுகாதார அமைச்சின் வலைத்தளம் (https://www.moh.gov.sg)
- உலக சுகாதார நிறுவனத்தின் வலைத்தளம் (https://www.who.int)
- உங்களது myLibrary ID-யைக் கொண்டு அணுகக்கூடிய தேசிய நூலக வாரியத்தின் மின் வளங்கள் (eresources.nlb.gov.sg). நீங்கள் தேசிய நூலக வாரியத்தின் மின் வளங்களில் உள்ள ப்ரோக்குவெஸ்ட் சென்ட்ரல் (ProQuest Central), ப்ரோக்குவெஸ்ட் ஹெல்த் (ProQuest Health), மருத்துவத் தொகுப்பு (Medical Collection) ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள வலைத்தளங்களைத் தவிர, தொழில்முறைச் சுகாதார நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவை தரும் அல்லது மேற்கோள் காட்டும் நம்பகமான மருத்துவ வலைத்தளங்களையும் நீங்கள் அணுகலாம்.



மேலே கூறப்பட்ட S.U.R.E. படிநிலைகளைப் பயன்படுத்துவதன் மூலம், நீங்கள் வாசித்த சுகாதாரத் தகவல் நம்பகமானதா என்பதைப் பற்றியத் தெளிவான முடிவை நீங்கள் எடுக்க முடியும்!

s.u.r.e.
Source · Understand · Research · Evaluate

sure.nlb.gov.sg